இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 18-03-2025

# பொருளாதார ஆய்வறிக்கையும் நிதிநிலை அறிக்கையும் - 1

**த**மிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டைஎத்தகையஉன்னதமானநிலைக்குக்கொண்டுவந்திருக்கிறார் என்பதை விளக்கும் அறிக்கையாக தமிழ்நாடு அரசின் பொருளாதார அறிக்கை அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற அடிப்படையில் எத்தகைய ஆட்சியை நடத்தி வருகிறார் என்பதை உணர்த்தும் அறிக்கையாக தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

இந்த இரண்டு அறிக்கைகளும் ஒரு நல்லாட்சியின் இலக்கணமாக - மக்களாட்சியின் வடிவமாக கொள்கை ஆட்சியை உணர்த்துவதாக அமைந்துள்ளன.

**பொதுவாகவே பொருளாதார அறிக்கை வெளியிடுவதற்கு ஒரு துணிச்சல் வேண்டும். நூற்றுக்கு நூறு மதிப்பெண் எடுத்த மாணவன், சத்தம் போட்டு தனது மதிப்பெண்ணைச் சொல்வதைப் போன்ற செயல் இது. தோல்வி அடைந்த மாணவர், அப்படிச் சொல்வது இல்லை. அது போல, வளர்ந்த மாநிலம், வளர்ச்சியை அடைந்த மாநிலம், வளர்ச்சியை உருவாக்கிய மாநிலம்தான் இத்தகைய அறிக்கையை வெளியிட்டு வெளிச்சப்படுத்திக் கொள்ள முடியும்.**

தமிழ்நாடு அரசின் மாநிலத் திட்டக் குழுவின் சார்பில், ‘தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024—25’ வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை இப்படி ஒரு ஆய்வறிக்கை வெளியானது இல்லை. இப்படி ஒரு அறிக்கையை இந்தியாவின் வேறு எந்த மாநிலமும் வெளியிட இயலாது என்று சொல்லும் அளவுக்கு இந்த அறிக்கை அமைந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சிப் போக்கை பாதிக்கும் உலக அளவிலான சவால்களை தமிழ்நாட்டுப் பொருளாதாரம் சமாளித்து எதிர்கொண்ட விதத்தை பொருளாதார ஆய்வறிக்கை விவரிக்கிறது.

**2023 ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரமானது 3.33 விழுக்காடு தான் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியப் பொருளாதாரமானது 6.48 விழுக்காடு என்ற அளவைத் தான் எட்டி உள்ளது. ஆனால் தமிழ்நாடு, கழக அரசு அமைந்த 2021 ஆம் ஆண்டு முதல் 8 விழுக்காடு அதற்கும் கூடுதலான வளர்ச்சியைப் பெற்றுள்ளதை இந்த அறிக்கை உறுதி செய்துள்ளது. வரும் ஆண்டிலும் இது தக்க வைக்கப்படும் என்பதைவிட, இன்னும் கூடுதல் ஆகும் என்பதையும் இந்த அறிக்கை நம்பிக்கையாகச் சொல்லி இருக்கிறது.**

இதற்குக் காரணம், இந்திய நாட்டின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ( ஜி.டி.பி.) தமிழ்நாடு 9.21 விழுக்காடு அளவுக்கு பங்களித்துள்ளது. அதாவது இந்திய நாட்டின் வளர்ச்சியில் நூறில் பத்து விழுக்காடு பங்கை தமிழ்நாடு செலுத்தி வருகிறது. மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜி.எஸ்.டி.பி.) ரூ.27.22 லட்சம் கோடியை எட்டி இருக்கிறது. இதன் காரணமாக பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71 விழுக்காடு ஆகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33 விழுக்காடு ஆகவும் இருக்கிறது.

**சமூக முன்னேற்றக் குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. உயர்கல்விச் சேர்க்கை விகிதத்தில் முதலிடத்தில் உள்ளது. குறைந்த வறுமை நிலைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சிக் குறியீட்டிலும் மருத்துவக் குறியீட்டிலும் மூன்றாவது இடத்தில் உள்ளது. சமூகத் துறைக்கான செலவினங்களை தமிழ்நாடு அரசு அதிகரித்து வருவதுதான் இதற்குக் காரணம்.**

இந்தியாவின் வறுமை நிலை என்பது 11.28 விழுக்காடாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் வறுமை நிலை என்பது 1.43 ஆகக் குறைந்துவிட்டது. அதாவது குறைக்கப்பட்டு விட்டது.

பணவீக்கம் குறைந்து வரும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. 20 முக்கிய இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 8 இடத்தில் - குறைந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கத்தைக் கொண்டுள்ள மாநிலமாக இருக்கிறது. மானிய விலையில் பொருள்கள் வழங்குவதும், சமூக நலத் திட்டங்களும், மகளிர் உரிமைத் தொகையும் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாக தேசிய சராசரியையும் விட அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம், தமிழ்நாடு என்பது ‘சென்னையைச் சுற்றி’ என்று இல்லாமல் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதியைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி அமைவதால்தான். அனைத்து நகரங்களும் வளர்கின்றன. கிராமப்புறப் பகுதிகள், நகரப் பகுதிகளைப் போல வளர்கின்றன. இதனால் நகரம் - கிராமம் இடைவெளியானது பல ஊர்களில் குறைந்தும் காணப்படுகிறது.

அதிகம் தொழில்மயமாக்கப்பட்ட - நகர்மயமாக்கப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. சேவைத் துறையானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக் கூட்டலில் ( ஜி.எஸ்.வி.ஏ.) 53.64 விழுக்காடு பங்களித்துள்ளது.

**வேளாண்மைத் துறை அதிவேகமாக வளர்ந்து வருகிறது. கரும்பு, எண்ணெய் உற்பத்தியில் முதலிடமும், மக்காச் சோள உற்பத்தியில் இரண்டாம் இடமும், நெல் உற்பத்தியில் மூன்றாவது இடமும் பெற்றுள்ளது. பாசனப் பரப்பு அதிகமாகி உள்ளது. உற்பத்தி அதிகமாகி உள்ளது.**

**தொழில் நிறுவனங்கள் அதிகமாகி வருகிறது. தொழிலாளர் அதிகரித்து வருகிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்கும் சமூகநிலைத் தன்மைக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கம் மிக முக்கியக் காரணியாகும் என்பதை உறுதி செய்கிறது இந்த அறிக்கை.**

இத்தகைய வளர்ச்சிக்கு என்ன காரணம் என்பதையும் இந்த ஆய்வறிக்கை மிகச் சரியாகச் சொல்கிறது. “தமிழ்நாட்டின் முற்போக்கான சமூக நலக் கொள்கைகளும், வலுவான உள்கட்டமைப்பு வசதிகளும், பெரும்எண்ணிக்கையிலானதிறன்மிகுதொழிலாளர்களும்இம்மாநிலத்தை மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இடம்பெறச் செய்துள்ளனர்” என்கிறது இந்த அறிக்கை.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆட்சிக்கு ‘திராவிட மாடல்’ என்றும், ‘அதன் பொருள் என்பது எல்லார்க்கும் எல்லாம்’ என்றும் சொல்வதும் இதனைத்தான். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். அதனைத்தான் இந்தப் பொருளாதார ஆய்வறிக்கையும் உறுதி செய்துள்ளது.**

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு வைத்துள்ளார்கள். இதனை எட்ட முடியும் என்பதை உணர்த்துவதாக பொருளாதார ஆய்வறிக்கை அமைந்துள்ளது.

**தொடரும்**





தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (16.03.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் சா.மன்மதன், நீர்வளத்துறை அரசு சிறப்பு செயலாளர் சு.ஶ்ரீதரன் மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள், துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை

# ஒவ்வொரு பிரிவினரையும் கவனத்தில் கொண்டுள்ளது!

## பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன் பாராட்டு!

சென்னை, மார்ச் 18 -

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையானது, சமுதாயத்தில் ஒவ்வொரு பிரிவினரையும் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனுவாசன் பாராட்டி தொலைக்காட்சி விவாதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன் கூறியதாவது:-

இந்த பட்ஜெட்டில் ஒவ்வொரு செக்டரையும் அவர் கவனத்தில் பிடித்து இருக்கிறார். இதனைவிட எனக்கு மிகவும் பிடித்து இருப்பது விலங்குகளுக்கென்று ஒரு சரணாலயம் கிரியேட் செய்ய வேண்டும் என்று செய்து இருக்கிறார்கள்.

அதே மாதிரி சென்னையில் குடிநீர் பிரச்சினை வரும் . அந்த குடி நீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு இன்னொரு நீர்த் தேக்கம் கிரியேட் செய்ய வேண்டும் அப்படி என்று முடிவு யெடுத்து இருக்கிறார்கள். அதே மாதிரி சென்னையில் ட்ரான்ஸ் போர்ட் பிரச்சினைக்கு அடுத்த ஆறு மெட்ரோ ரெயில் பிளான் இருக்கிறது. அதற்கு முன் அவினாசி , சத்திய மங்கலத்திற்கு ஒரு மெட்ரோ 8000 கோடி என்று நினைக்கிறேன். அதற்கான பிளானை சென்ட்ரல் கவர்ண் மென்ட்டிடம் கொடுத்து இருக்கிறோம். அதனை அவர்கள் பரிசீலனை செய்யாமல் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்.



தூத்துக்குடியாக இருக்கட்டும், திருநெல்வேலியாக இருக்கட்டும், ஓசூராக இருக்கட்டும் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு தொழிற்காலை அறிவித்து இருக்கிறார்கள். ஓசூரில் ஒரு நாளேஜ் காரிடர் (அறிவுசார் பெருவழிச்சாலை) அறிவிச்சு இருக்கிறார்கள். சென்னையில் இருந்து மாமல்லபுரம் எப்படி ஒரு ஐ.டி. காரிடர் அறிவிச்சு இருக்கிறார்களோ அதே மாதிரி பெங்களூருக்கு செல்வதற்கு ஒரு மணி நேரம் இரண்டு மணிநேரம் ஆகுறது என்பதினாலே அதனை ஓசூரில் இதனை யூஸ் செய்து இன்றைக்கு ஓசூர் பெங்களூருக்கும் இடையே ஒரு லிங்க் சிட்டி மாதிரி ஆகி இருக்கு ஒரு பார்டல் தான் ஆகிஇருக்கிறது. அதனால் ஓசூரை அதே மாதிரி மாற்ற இருக்கிறார்கள். அதே மாதிரி கள்ளக்குறிச்சி, தூத்துக்குடியில் ஒன்று சொல்லி இருக்கிறார்கள். இன்பாக்ட் ஓசூரில் ஒரு டைட்டல் பார்க் அறிவித்து இருக்கிறார்கள். இதே மாதிரி ஒவ்வொரு ஊருக்கும் ஒரு திட்டம் இருக்கிறது.

இவ்வாறு பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன் கூறினார்.

### தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை

# சமூக நலனையும் வளர்ச்சியையும் உள்ளடக்கியுள்ளது!

## பொருளாதார நிபுணர் ஜோதி சிவஞானம் பாராட்டு!

சென்னை, மார்ச் 18 -

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை சமூக நலனையும் சமுதாய வளர்ச்சியையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர் ஜோதி சிவஞானம் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் பாராட்டியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசின் பட்ஜெட் குறித்து பொருளாதார நிபுணர்ஜோதி சிவஞானம் கூறியதாவது.

விலைவாசி உயர்வையைப் பொறுத்த வரை இது மாநில அரசின் பொறுப்பு அல்ல. ஒன்றிய அரசின் பொறுப்பு. ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பது அடுத்து விலைவாசியை கட்டுக்குள் வைப்பது. வளர்ச்சிக்கு நிதி அமைச்சகம் பொறுப்பு விலைவாசியை கட்டுக்குள் வைப்பது ஆர்.பி.ஐ. பொறுப்பு. அவர்கள் ஏடாகூடமாக செய்து கொண்டு இருக்கிறார்கள். இது தமிழக அரசின் பொறுப்பு இல்லை. தமிழ் நாடு அரசு பொருளாதாரத்தில் ஓரளவு உயர்ந்து இருப்பதற்கு காரணம் இங்கு உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. ஜி.எஸ்.டி.பி. அதிகப்படுத்தி இருக்கிறோம்.

பட்ஜெட்டைப் பொறுத்தவரை எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது கடன் அதிகமாகிவிட்டது என்பது. அப்படி பார்க்கவே கூடாது. கடன் நாம் அதிகமாக வாங்கவே முடியாது. நமக்கு நிதித் துறை ஒரு சீலிங் வைத்து இருப்பார்கள். எப்.ஆர்.பி.எம். என்ற ஒரு ஆக்ட் இருக்கு. இந்த ஆக்ட்டுக்கு மேலே கட்டுக் கடங்காமல் கடன் வாங்குவது ஒன்றிய அரசுதான்.

இந்தச் சட்டத்தின்படி ஒன்றிய அரசு 40 சதவிகிதம் தான் கடன் வாங்கலாம். இன்றைக்கு ஒன்றிய அரசு 60 சதவிகிதம் கடன் வைத்து இருக்கிறது.

அதே மாதிரி மாநில அரசுக்கு 15வது கமிஷன் சொன்ன சீலிங் இந்த வருடத்திற்கு 28.7 சதவிகிதம். ஜி.எஸ்.டி.பி.யில் நமது வருமானத்தில் 28.7 சதவிகிதம் கடன் வாங்கலாம். நமது கடன் 26.07 சதவிகிதம் தான் இருக்கிறது. அதனையும் குறைத்து இருக்கிறார்கள். கடன் என்பது ஒரு கிரைம் இல்லை. வளர்ச்சித் திட்டங்கள் தான். இன்றைக்குநான் சொன்னேனே 4.5 இலட்சம் கோடி ரூபாய் நமது பட்ஜெட் . அந்த பட்ஜெட்டில் இந்தத் திட்டங்கள் எல்லாம் 55 லிருந்து 60 சதவிகிதம் இந்தச் செலவுகள் எல்லாம் கல்வி, சுகாதாரம், பெண்கள் நலன், ஊரக வளர்ச்சி நகர்ப்புற வளர்ச்சி, கட்டுமானத் திட்டங்கள் இப்படி 60 சதவிகிதம் நாம் செலவு செய்கிறோம்.

ஒன்றிய அரசோடு ஒப்பிட்டுப் பாருங்கள். கடந்த பத்து ஆண்டுகாலமாக தொடர்ந்து கல்விக்கு குறைத்துக் கொண்டு வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையின் ஒட்டுமொத்த நோக்கமே கல்வியில் 40 , 50 சதவிகிதம் ஆக்குவதுதான். அதனை நாம் ஏற்கனவே எட்டிவிட்டோம். இது குறித்து சமர்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை என்ன சொல்கிறது என்றால் இதனை இந்தியாவோடு ஒப்பிடத்தேவையில்லை தமிழ் நாட்டை வெளி நாட்டோடுதான் ஒப்பிட வேண்டும்.

பொருளாதார ஆய்வரிக்கையைப் பார்த்தால் ஒட்டுமொத்தமாக இவை எல்லாமே நாம் ஒரு டிரில்லியன் டாலர் எட்ட வேண்டும் என்பது அதற்கு நாம்மூன்று மடங்கு வளர்ச்சி அடைய வேண்டும். இப்போது இருக்கின்றது மாதிரி மூன்று மடங்கு வளர்ச்சியை



நாம் அதிகப்படுத்திட வேண்டும். அதனை அதிகப்படுத்தத்தான் இத்தனையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். சென்னைக்கருகில் சேட்டிலைட் நகரம் செய்யப்போகிறோம் என்று பட்ஜெட்டில் சொல்லி இருக்கிறார்கள். இவை எல்லாமே -நமது அணுகு முறை நமது வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்கும் அதே சமயம் நம் சமூக நலத்திலும் மற்றதிலும் நாம் எல்லாவற்றிலும் உள்ளடக்கி இருக்கிற ஒரு வளர்ச்சியை அடைந்து இருக்கிறோம்.

சமூகத்தில் கவனம் செலுத்துவதினால் தான் இன்றைக்கு பொருளாதார வளர்ச்சி நமக்கு கை கொடுக்கிறது. அது வருவாய் பெருக்கத்திற்கும் உதவுகிறது. இவையெல்லாம் தான் நோக்கமாக வைத்து திட்டமிட்டு இருக்கிறார்கள். நூறு நாள் வேலைதிட்டத்தில் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை என்றாலும் தமிழ்நாடு அரசு அதற்காக நிதி ஒதுக்கி இருக்கிறது. கல்விக்கும், 100 நாள் வேலை திட்டத்துக்கும் அரசியல் காரணத்தால் ஒன்றிய அரசு நிதி ஒதுக்காத போதும் இந்த பட்ஜெட்டில் , கல்விக்கும் 100 நாள் வேலை திட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து அதற்கான நிதியையும் இந்த பட்ஜெட்டில் ஒதுக்கி இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் உடல்நிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

சென்னை, மார்ச் 18 -

இசைப் புயல் ஏ.ஆர்.ரகுமான் உடல் நிலை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவர்களிடம் கேட்ட றிந்தார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

இசைப்புயல் ஏ.ஆர்,ரகுமான் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள செய்தியறிந்தவுடன், மருத்துவர்களைத் தொடர்பு கொண்டு அவரது உடல்நலன் குறித்துக் கேட்டறிந்தேன்!

அவர்நலமாக உள்ளதாகவும் விரைவில் வீடுதிரும்புவார் என்றும் தெரிவித்தனர்! மகிழ்ச்சி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

**ஏ.ஆர்.ரகுமான் வீடு திரும்பினார்!**

இதற்கிடையெ இசைப் புயல் ஏ.ஆர். ரகுமான் சிகிச்சை முடிந்து நேற்று முன்தினம் மதியம் வீடு திரும்பினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 15.3.2025 அன்று முகாம் அலுவலகத்தில் திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்கள் ஏ.ரியா, ஆர். அனுஸ்ரீ, நாடகக் கலைஞர் மற்றும் எழுத்தாளர் ஏ. ரேவதி மற்றும் திருநங்கையர்கள் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025 – 26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் மூன்றாம் பாலினத்தவருக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், ஊர்க்காவல் படையில் மூன்றாம் பாலினத்தவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.